# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0760/2016/ந

ஆணை எண்: 0184/2016

நாள்: 03/12/2016

திரு. P.கருப்பையா,
த/பெ. புளுகாண்டி,
399, செங்குட்டுவன் தெரு,
துரைச்சாமியாபுரம்,இராஜபாளையம் வட்டம்,
விருதுநகர் மாவட்டம். மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
ராஜபாளையம் நகராட்சி, விருதுநகர் மாவட்டம். எதிர் மனுதாரர்

## ஆணை:

மனுதாரர் தனது 25.07.2016 நாளிட்ட மனுவினை முறையே உரிய படிவத்திலும், ரூ.10-க்கான நீதி மன்ற வில்லையுடனும் தாக்கல் செய்யவில்லை. 2015-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ (குற்றச்சாட்டு தாக்கல், விசாரித்தல் மற்றும் முடித்தல்) விதிகளின், விதி 4-ன்படி உரிய படிவத்தில் முறையீட்டு மனுவினை ஆதாரங்களின் நகல்களுடன் அனுப்பி வைத்திடுமாறு இம் முறைமன்ற நடுவ 28.07.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் மனுதாரர் தனது 5.8.2016 நாளிட்ட கடிதத்துடன் உரிய படிவத்திலான முறையீட்டு மனுவினை நீதிமன்ற வில்லையுடன் தாக்கல் செய்தார். ஆயினும், அவர் முறையீட்டு மனுவினை முறையே முழுமையாக பூர்த்தி செய்யாமலும் கையொப்பமிடாமலும் அனுப்பி வைத்துள்ளார்.

அவ்வாறு குறைபாடுடைய மனுவாக இருப்பினும் மனுதாரர்க்கு வாய்ப்பளிக்கும் வகையில் அவரது முறையீடு எண்:0760 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது குறித்த விவரம் தெரிவிக்கப்பட்டதுடன் 07.10.2016 அன்று தன் வசமுள்ள ஆதாரங்களுடன் விசாரணைக்கு ஆஜராகுமாறு அ.ம.எண்:0760/2016/ந-1 நாள்:06.09.2016ன் மூலம் அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், முறையீட்டு மனு தொடர்பாக இராஜபாளையம் நகராட்சி ஆணையரது அறிக்கையும் கோரி பெறப்பட்டது.

ஆனால், மனுதாரர் 07.10.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகாததுடன் வர இயலாமைக்கான காரணங்களையும் தெரிவிக்கவில்லை. விதி 8ன்படி குறைபாடுடைய முறையீட்டு மனுவாக இருப்பினும் வாய்ப்புகள் அளிக்கப்பட்ட பின்னரும் மனுதாரர் தனது தரப்பிலான ஆதாரங்களையும், காரணங்களையும் தாக்கல் செய்ய மனுதாரர் தவறியமையால் முகாந்திரம் மற்றும் ஆதாரமற்ற முறையீடாகக் கருதி தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2016ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3–ம் நாளன்று கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

–//ஒப்பம்//––
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

16/12/2016
செயலாளர்.

15.12.16

15/12/16

<u>பெறுநர்</u>

1. திரு. P.கருப்பையா,
   த/பெ.புளுகாண்டி,
   399, செங்குட்டுவன் தெரு,
   துரைச்சாமியாபுரம்,இராஜபாளையம் வட்டம்,
   விருதுநகர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   ராஜபாளையம் நகராட்சி,
   விருதுநகர் மாவட்டம்.